பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 160

செவ்வாய்க்கிழமை
06 மே 2025

சித்திரை 23 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

## அசாதாரண காலநிலை; 26 பேருக்கு பாதிப்புகள்

யாழ்ப்பாணம், மே 6
யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் பின்னிரவுமுதல் நேற்று மாலை வரை நிலவிய அசாதாரண 11

# இன்று உள்ளூராட்சித் தேர்தல் பாதுகாப்பு ஏற்பாடுகள் உச்சம்!

கொழும்பு, மே 6

கொழும்பு மற்றும் யாழ்ப்பாணம் மாநகரசபைகள் உட்பட இலங்கையில் உள்ள 339 உள்ளூராட்சிசபைகளுக்குரிய தேர்தல் இன்று நடைபெறுகின்றது. காலை 7 மணி முதல் மாலை 4 மணிவரை வாக்காளர்கள் தமது வாக்குரிமையைப் பயன்படுத்துவதற்கு தேவையான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. 11

## வாக்களிப்பு நிலையங்களுள் கட்டுப்பாடுகள் மிக இறுக்கம்!

### தேர்தல் ஆணைக்குழு எச்சரிக்கை

கொழும்பு, மே 6
உள்ளூராட்சித் தேர்தலின்போது வாக்களிப்பு நிலையங்கள் மற்றும் வாக்கெண்ணும் நிலையங்களில் தவிர்க்கப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பில் தேர்தல் ஆணைக் குழு விசேட 11

## வடமாகாணத்துக்கு மின்னல் எச்சரிக்கை

கொழும்பு, மே 6
வடக்கு மாகாணத்தில் பரவலாக அதீத மின்னல் தாக்கங்கள் ஏற்படும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.
இது தொடர்பில் அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் உள்ளதாவது:-
இலங்கையில் வடமத்திய மாகாணம் மற்றும் வடக்கு மாகாணங்களில் (குறிப்பாக 11

## சுதந்திரமான தேர்தலை உறுதிப்படுத்த உதவுக

### தேர்தல்கள் ஆணைக்குழு பொதுமக்களிடம் கோரிக்கை

கொழும்பு, மே 6
சுதந்திரமானதும் நீதியானதுமான வகையில் தேர்தலை நடத்துவதற்கு பொதுமக்கள் முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க கோரிக்கை விடுத்துள்ளார்.
தேர்தல்கள் ஆணைக்குழுவின் அலுவலகத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் 11

## மேர்வின் சில்வாவுக்கு நீடிக்கப்பட்ட மறியல்!



கொழும்பு, மே 6
அரச காணியை போலி ஆவணங்களைத் தயாரித்துத் தனியாருக்கு விற்பனை செய்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டில், முன்னாள் அமைச்சர் மேர்வின் 11

### சட்டவிரோதமான முறையில்

## இலங்கைக்குள் ஊடுருவியவர் நெடுந்தீவுக் கடலில் கைது!

விரிவு பக்கம் 11

## யாழ். போதனாவில் சிறுவன் மர்மச் சாவு

### மாதிரிகள் கொழும்புக்கு

யாழ்ப்பாணம், மே 6
வட்டுக்கோட்டை பகுதியைச் சேர்ந்த சிறுவன் ஒருவன், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் உயிரிழந்துள்ளார். அவரின் மாதிரிகள் கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளன.
சசிதரன் திசானுஜன் (வயது 15) என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்தவ 11

## பயணப்பையில் கசிப்பு; சந்தேகநபர் கைதானார்

கிளிநொச்சி, மே 6
தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணப்பையில் வைத்து கசிப்பைக் கடத்திச் சென்ற சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.
பொலிஸாருக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கு அமையவே அவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், சந்தேகநபரிடம் இருந்து 22 லீற்றர் கசிப்பும் மீட்கப்பட்டுள்ளது. அவரை சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தும் நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-113)



## நகுலேஸ்வரர் ஆலயத்தில் காண்டாமணி பிரதிஷ்டை!

### லண்டனில் உருவாக்கப்பட்டதாம்

யாழ்ப்பாணம், மே 6
கீரிமலை ஸ்ரீ நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரர் ஆலயத்துக்கென லண்டன் மாநகரிலிருந்து கொண்டுவரப்பட்ட புதிய காண்டாமணி அண்மையில் பிரதிஷ்டை செய்யப்பட்டது.
மேற்படி ஆலயத்தின் முன்னாள் பிரதமகுருவான, 11

## அடி காயங்களுடன் ஆணின் சடலம்!

முல்லைத்தீவு, மே 6
முல்லைத்தீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பச்சைப் புல்மோட்டை ஏரிப் பகுதியில் ஆணொருவர் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
அம்பலவன் பொக்கணை புதுமாத்தளன் பகுதியைச் சேர்ந்த சீலன் ராஜ்குமார் (வயது 27) என்பவரே இவ்வாறு சடலமாக 11




'மறக்காமல் எல்லாரும் விடியவே போய் வாக்குப்போட்டிடுங்கோ'

## கணேசபுரத்தில் திருடப்பட்ட 35 பவுண் நகைகள் மீட்பு!

### நெளுக்குளம் பொலிஸார் அதிரடி



வவுனியா, மே 6
வவுனியா - நெளுக்குளம் பகுதியில் இரண்டு தினங்களுக்கு முன்னர் திருடப்பட்ட 35 பவுண் நகைகள் மீட்கப்பட்டுள்ளன என்று நெளுக்குளம் பொலிஸார் தெரிவித் 11

### இலங்கை - வியட்நாம் இடையே

## ஐந்து ஒப்பந்தங்கள் நேற்றுக் கைச்சாத்து

கொழும்பு, மே 6
இலங்கைக்கும் வியட்நாமுக்கும் இடையில் பல்வேறு துறைகள் சார்ந்த ஐந்து ஒப்பந்தங்கள் நேற்றுக் கைச்சாத்திடப்பட்டுள்ளன என்று தகவல்கள் வெளிவந்துள்ளன.
ஜனாதிபதி அநுரகுமார மூன்று நாள்கள் பயணமாக வியட்நாமுக்குச் சென்றிருந்தார். வியட்நாம் ஜனாதிபதி மாளிகையில் நேற்றைய தினம் இரண்டு நாடுகளின் உயர்மட்டப் பிரதிநிதிகளுக்கு இடையில் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன. 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 05.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4064 |
| ஆங்கில எழுத்து | E |
| வெற்றி இலக்கங்கள் | 22 45 50 61 |
| விசேட எழுத்து | E |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 05.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1137 |
| வெற்றி இலக்கினம் | மிதுனம் |
| வெற்றி இலக்கங்கள் | 05 07 20 25 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 05.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0090 |
| ஆங்கில எழுத்து | J |
| வெற்றி இலக்கங்கள் | 1 8 4 9 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 05.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2170 |
| ஆங்கில எழுத்து | T |
| சுப்பர் இலக்கம் | 22 |
| வெற்றி இலக்கங்கள் | 08 38 63 73 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 05.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5822 |
| ஆங்கில எழுத்து | A |
| வெற்றி இலக்கங்கள் | 7 8 9 3 5 3 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 05.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1852 |
| ஆங்கில எழுத்து | U |
| வெற்றி இலக்கங்கள் | 04 14 41 81 |
| விசேட எழுத்து | U |

| அத சம்பத | |
|---|---|
| திகதி | 05.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0397 |
| ஆங்கில எழுத்து | A |
| வெற்றி இலக்கங்கள் | 9 3 5 3 |

இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவுக்கு

# 3 மாதங்களில் மட்டும் 1,267 முறைப்பாடுகள்!

கொழும்பு, மே 6

**இந்த ஆண்டின் முதல் 3 மாதங்களில் இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவுக்கு ஆயிரத்து 267 மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.**

கடந்த ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் மார்ச் மாதம் 31ஆம் திகதிவரை ஆயிரத்து 267 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதேவேளை, இந்தக் காலப்பகுதியில் நாடு முழுவதும் முன்னெடுக்கப்பட்ட 24 சோதனை நடவடிக்கைகளில் சந்தேகநபர்கள் 20 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைதுசெய்யப்பட்டவர்களில் 6 பேர் பொலிஸ் அதிகாரிகள், ஒரு அதிபர், தொழில் அமைச்சின் அதிகாரி, ஒரு கள அதிகாரி மற்றும் ஒரு குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்கள அதிகாரி ஆகியோரும் உள்ளடங்குகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு மேலதிகமாக பொது சுகாதாரப் பரிசோதகர், அபிவிருத்தி உத்தியோகத்தர், நீதி அமைச்சில் பணியாற்றும் ஊழியர், இறைவரித் திணைக்கள மதிப்பீட்டு அதிகாரி ஆகியோரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த ஆண்டில் மட்டும் 24 பேருக்கு எதிராக நீதிமன்றங்களில் 21 வழக்குகள் தாக்கல்செய்யப்பட்டுள்ளன என்றும் இலஞ்சம் ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (எ-இ)

| சுபிரி தன சம்பத | | | |
|---|---|---|---|
| திகதி | 05.05.2025 | தினம் | திங்கட்கிழமை |
| வெற்றி வாரம் | 0530 | | |
| ஆங்கில எழுத்து | K | வெற்றி இலக்கம் | 8 6 5 3 8 0 |

| Super Ball | | | |
|---|---|---|---|
| திகதி | 05.05.2025 | தினம் | திங்கட்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 2796 | ஆங்கில எழுத்து | E |
| வெற்றி இலக்கம் | 30 37 51 79 | | |

| சனிதா | | | |
|---|---|---|---|
| திகதி | 05.05.2025 | தினம் | திங்கட்கிழமை |
| ஆங்கில எழுத்து | O | வெற்றி இலக்கம் | 04 12 31 43 |
| வெற்றி வாரம் | 4957 | | |

| லக்ன ராசி | | | |
|---|---|---|---|
| திகதி | 05.05.2025 | தினம் | திங்கட்கிழமை |
| மகரம் | ♑ | வெற்றி இலக்கம் | 28 35 45 60 |
| சீட்டிழுப்பு வாரம் | 4508 | | |

| KAPRUKA | | | |
|---|---|---|---|
| திகதி | 05.05.2025 | தினம் | திங்கட்கிழமை |
| ஆங்கில எழுத்து | R | சுப்பர் இலக்கம் | 35 |
| வெற்றி இலக்கம் | 48 50 66 74 | வெற்றி வாரம் | 1972 |

| அத கோடிபதி | | | |
|---|---|---|---|
| திகதி | 05.05.2025 | தினம் | திங்கட்கிழமை |
| ஆங்கில எழுத்து | S | வெற்றி இலக்கம் | 44 47 52 63 |
| வெற்றி வாரம் | 2622 | | |

| JAYODA | | | |
|---|---|---|---|
| திகதி | 05.05.2025 | தினம் | திங்கட்கிழமை |
| ஆங்கில எழுத்து | A | வெற்றி இலக்கம் | 28 44 48 55 |
| வெற்றி வாரம் | 2124 | | |

## மாத்தறைச் சிறையில் கைபேசிகள் மீட்பு

மாத்தறைச் சிறைச்சாலையில் கடந்த சனிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையில் 14 கைபேசிகள் உட்படப் பல்வேறு பொருள்கள் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் நடத்தப்பட்ட சோதனையிலேயே இவை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

14 கைபேசிகள், 5 கைவிலங்குகள், 4 கைவிலங்குச் சாவிகள் உட்படப் பல பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## வெளிநாட்டுக்கு தப்பியோரை மீளக்கொண்டுவர நடவடிக்கை

கொழும்பு, மே 6

நாட்டில் குற்றங்களில் ஈடுபட்டுவிட்டு வெளிநாடுகளுக்குத் தப்பிச்சென்ற 20க்கும் மேற்பட்டவர்களை நாட்டுக்குக் கொண்டுவரும் முயற்சிகள் நடைபெற்றுவருகின்றன என்று இலங்கைப் பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது. சந்தேகநபர்கள் தற்போது டுபாய், இந்தியா, கனடா உள்ளிட்ட நாடுகளில் உள்ளனர் என்றும், அவர்களை மீள நாட்டுக்குக் கொண்டுவரும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார். (எ-இ)



## உள்நாட்டுத் துப்பாக்கியுடன் ஒருவர் கைது

உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் சூரியபுர பொலிஸ் பிரிவில் கைதுசெய்யப்பட்டுள்ளார். சூரியபுரப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் கந்தளாயைச் சேர்ந்த 46 வயதான ஒருவரே கைதுசெய்யப்பட்டுள்ளார். இது தொடர்பான மேலதிக விசாரணைகள் சூரியபுரப் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (எ-இ)

## களஞ்சியசாலையை உடைத்து வெடிபொருள்கள் திருட்டு!

அம்பாறை, மே 6

அம்பாறையில் உள்ள அலஹேன கிராமத்தில் உள்ள வெடிமருந்துக் களஞ்சியசாலை உடைக்கப்பட்டு அங்கிருந்த வெடிமருந்து உள்ளிட்ட வெடிபொருள்கள் திருடப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

45 கிலோகிராம் ஜெல் குச்சிகள், 10 மீற்றர் சேர்வீஸ் நூல், 4 ஆயிரத்து 100 டெட்டனேட்டர்கள் போன்றவை திருடப்பட்டுள்ளமை முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இந்த வெடிமருந்துக் களஞ்சியசாலை தனியார் கல்குவாரி உரிமையாளர்களின் வெடிமருந்துக் களஞ்சியசாலை என்று தெரிவிக்கப்படுகின்றது. மூன்று வெடிமருந்துக் களஞ்சியசாலைகளில் ஒன்றின் பூட்டு உடைக்கப்பட்டுப் பொருள்கள் திருடப்பட்டுள்ளன என்று கூறப்படுகின்றது. (எ-இ)

பல்கலைக்கழக மாணவர் மரணம்

# பகிடிவதையில் ஈடுபட்ட எட்டு மாணவர்கள் கைது

விசாரணைகள் தொடர்கின்றன

யாழ்ப்பாணம், மே 7


சப்ரகமுவ பல்கலைக்கழக தொழில்நுட்ப பீடத்தின் இரண்டாம் ஆண்டு மாணவன், அதே பல்கலைக்கழகத்தில் நடந்த பகிடிவதை காரணமாக உயிரிழந்த நிலையில், இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய எட்டு மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த விடயம் நாடளாவிய ரீதியில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்தது. விடயம் குற்றப் புலனாய்வுத் துறைக்குப் பாரப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, மேற்கொள்ளப்பட்ட துரிதமான விசாரணைகளைத் தொடர்ந்து நேற்றுமுந்தினம் நான்கு மாணவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர். இந்த நிலையில் நேற்றையதினம் மேலும் நான்கு மாணவர்கள் தாமாகச் சரணடைந்துள்ளனர்.

பொலிஸாரிடம் சரணடைந்த அந்த மாணவர்கள் நால்வரும், முதற்கட்ட விசாரணைகளைத் தொடர்ந்து, கைது செய்யப்பட்டு குற்றப் புலனாய்வுப் பிரிவிடம் பாரப்படுத்தப்பட்டனர். இதுவரை எட்டு மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், அவர்கள் அனைவரும் நீதிமன்ற உத்தரவுக்கு அமைய எதிர்வரும் 16ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்களிப்பு நிலையங்களுக்கு வாக்குப்பெட்டிகள் கையளிப்பு


கிளிநொச்சி



வவுனியா


யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம், மே 6

இன்று நடைபெறவுள்ள உள்ளூராட்சிச்சபைத் தேர்தலுக்கான வாக்குப் பெட்டிகளை வாக்களிப்பு நிலையங்களுக்குக் கொண்டுசெல்லும் நடவடிக்கைகள் நேற்று முன்னெடுக்கப் பட்டன. வடக்கில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களில் வாக்குப்பெட்டிகள் சிரேஷ்ட தலைமைதாங்கும் அலுவலகர்கள் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களுடன் பஸ்களில் அனுப்பிவைக்கப் பட்டன. (எ-110,66,2 0,113, 56)



## தேர்தலை முன்னிட்டு விசேட பாதுகாப்பு

கொழும்பு, மே 6

உள்ளூராட்சித் தேர்தலை முன்னிட்டு நேற்றுக்காலை முதல் விசேட பாதுகாப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். தேவை ஏற்பட்டால் இராணுவத்தினரின் உதவியும் பெறப்படும் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (எ-இ)

## தேர்தல் சட்ட மீறல்களுக்காக 24 மணிநேரத்தில் ஐவர் கைது

கொழும்பு, மே 6

நேற்றுக்காலை 6 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் தேர்தல் சட்டங்களை மீறியமை மற்றும் தேர்தலுடன் தொடர்புடைய ஏனைய குற்றங்கள் தொடர்பில் 5 பேர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.


தேர்தல் சட்டங்களை மீறியமை மற்றும் தேர்தலுடன் தொடர்புடைய ஏனைய குற்றங்கள் தொடர்பில் இதுவரை 54 வேட்பாளர்களும், 204 சந்தேகநபர்களும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். தேர்தல் நடவடிக்கைகளுக்காக சட்டவிரோதமாகப் பயன்படுத்தப்பட்ட 46 வாகனங்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (எ-இ)

## நெடுந்தீவுக்கு படகில் வாக்குப்பெட்டிகள்

யாழ்ப்பாணம், மே 6

நெடுந்தீவுக்கான வாக்குப்பெட்டிகள் கடற்படையினரின் உதவியுடன் நேற்றுக் கொண்டுசெல்லப்பட்டன. நெடுந்தீவுப் பிரதேச செயலாளர் திருமதி நிவேதிகா தலைமையிலான குழு வாக்குப்பெட்டிகளைப் பொறுப்பேற்றது. (எ-125)





## நெடுந்தீவில் வழமைக்குத் திரும்பியது மின் வழங்கல்

யாழ்ப்பாணம், மே 6

நெடுந்தீவில் மின்சார விநியோகம் வழமைக்குத் திரும்பியுள்ளது என்று நெடுந்தீவுப் பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார். நெடுந்தீவில் உள்ள மூன்று மின்பிறப்பாக்கிகளில் இரண்டு மின்பிறப்பாக்கிகளில் இயந்திர விரிசல் ஏற்பட்டு ஒயில் கசிவு ஏற்பட்டதால் கடந்த சனிக்கிழமை பி.ப. 6.30 மணி முதல் மின்தடை ஏற்பட்டது. அதையடுத்து சுழற்சிமுறையில் மின்சாரம் விநியோகிக்கப்பட்டது. நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை பழுது சரிபார்க்கப்பட்டதை அடுத்து, மின்விநியோகம் வழமைக்குத் திரும்பியுள்ளது என்று அவர் தெரிவித்தார். (எ-125)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




உடையவன் இல்லாட்டி ஒருமுழம் கட்டை எண்டு சொல்லுவினம். ஆனால் சில இடங்களில இது மாறியும் நடக்கும். ஆர் பொறுப்புச் சொல்லோணுமோ, ஆர் ஒரு இடத்தில பிரச்சினை வராமல் பாக்கவேணுமோ அவையே பிரச்சினையா மாறினால் கதை கந்தல்தான். அப்பிடித்தான் யாழ்ப்பாணத்து ஆஸ்பத்திரி ஒண்டில பொறுப்பா இருக்கிற டாக்குத்தர் ஒருத்தர், அந்த ஆஸ்பத்திரிக்கே சிக்கலைக் குடுக்கிறார் எண்டு அங்க வேலை செய்யிற எல்லாரும் போர்க்கொடி தூக்கியிருக்கினம்.

சிட்டயில அந்த ஆஸ்பத்திரியில அவசர சிகிச்சைப் பிரிவில இருந்த ஒரு வருத்தக்காரரைப் பாக்கப்போன ஒரு பொம்பிளை, அங்க டியூட்டியில நிண்ட டாக்குத்தரை கேளாக்கேள்வி கேட்டு, கொலை மிரட்டல் எல்லா விட்டு பெரும் பிரச்சினையானது. இப்பிடி அடாவடியா ஆஸ்பத்திரிக்குள்ள புகுந்து ஒராள் டாக்குத்தர்மாரை வெருட்டினதுக்கு, அந்த ஆஸ்பத்திரிக்குப் பொறுப்பா இருக்கிறவர்தான் பொலிஸில கேஸ் போட்டிருக்க வேணும். ஆனால் அவர் அதைப்பற்றி தனக்கொண்டும் தெரியாதமாதிரி இருந்திட்டார். ஆனால் அவருக்குத் நடந்த பிரச்சினை தெரியும். பாதிக்கப்பட்ட டாக்குத்தரோட அண்டைக்கு இரவே அவர் ரெலிபோனில இதைப் பற்றிக் கேட்டுப் போட்டு அதைப்பற்றி ஒரு நடவடிக்கையும் எடுக்கேலை. டாக்குத்தர்தான் தன்ர பாதுகாப்புக்காக பொலிஸில தனிப்பட போய் முறைப்பாடு குடுக்கோணும் எண்டு ஆஸ்பத்திரிக்குப் பொறுப்பானவர் கையை விரிச்சிட்டாராம்.

இதைவிடவும் அங்க நடக்கிற பிரச்சினையளை பெரிசாக்கிறதும், புதுசா பிரச்சினையளை உருவாக்கிறதுமாத்தா அவர் இருக்கிறாரே தவிர, அந்தப் பிரச்சினையளைத் தீர்க்கிறமாதிரி ஆஸ்பத்திரிக்குப் பொறுப்பா இருக்கிறவர் நடக்கிறேலை. பொறுத்துப் பொறுத்துப் பார்த்த டாக்குத்தர்மாரும் கடைசியில பணிப்புறக்கணிப்பில இறங்கிட்டினம். ஆஸ்பத்திரிக்குப் பொறுப்பா இருக்கிறவரைப் பற்றி விசாரணை செய்யோணும் எண்டுதான் அவையின்ர கோரிக்கை. ஆனால் ஆஸ்பத்திரிக்குப் பொறுப்பானவர், மேலதிகாரியோட கடும் 'நேசம்'. அந்த நேசத்தாலையோ என்னவோ, இவை பணிப்புறக்கணிப்பு நடத்தியும் பொறுப்பானவர் மீது விசாரணை செய்யிறம் எண்டு மேல்மட்டம் சொல்லுதில்லை. இதால எலக்சன் முடிஞ்ச பிறகு திரும்பவும் பணிப்புறக்கணிப்பில இறங்கிறதெண்டு டாக்குத்தர்மார் முடிவெடுத்திருக்கினம். மடியில கனமில்லாட்டி வழியில பயமிருக்காதே. பிழை விடாதவை விசாரணைக்கு ஓமெண்டலாமே. விசாரணைக்கு இப்பிடிப் பின்னடிக்கிறதைப் பாக்க பெரும் பிரச்சினையள் எல்லாம் ஒளிஞ்சிருக்குப் போல. மலிஞ்சால் எல்லாம் சந்தைக்கு வரத்தானே வேணும்.

padsi@uthayan.com - பட்சி



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். சிலருக்கு திடீர் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வெளியூரில் இருந்து எதிர்பார்த்த செய்தி கிடைக்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். புதிய முயற்சிகளை பிற்பகலுக்குமேல் தொடங்கவும்.

**இடபம்:** எதிர்பாராத செலவுகள் அதிகரிக்கும். தேவையான பணம் கையில் இருப்பதால், உற்சாகமாகச் சமாளித்துவிடுவீர்கள். வாழ்க்கைத் துணைவழி உறவுகளிடம் எதிர்பார்த்த காரியம் நல்லபடிமுடியும். உறவினர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

**மிதுனம்:** சகோதரவகையில் வீண் செலவுகள் ஏற்படும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும். இழுபறியாக இருந்த முக்கியமான காரியம் ஒன்று அனுகூலமாக முடியும். வியாபாரத்தில் இலாபம் கூடுதலாகக் கிடைக்கும்.

**கடகம்:** இன்று உற்சாகமாகக் காணப்படுவீர்கள். பிள்ளைகளின் செயற்பாடுகள் வீட்டில் கலகலப்பான சூழ்நிலையை ஏற்படுத்தும். சுபநிகழ்ச்சிக்கான பேச்சுவார்த்தை சாதகமாக முடியும். தாய்வழி உறவுகளால் நன்மை உண்டாகும்.

**சிம்மம்:** தேவையான பணம் கையில் இருக்கும். காரியங்கள் முடிவதில் தாமதம் ஏற்பட்டாலும் முடித்துவிடுவீர்கள். இளையசகோதரர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு உண்டாகும்.

**கன்னி:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்குவரும். ஆனால், திடீர் செலவுகளால் கையிருப்புகரையும். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களுடன் இணக்கமாக நடந்து கொள்வது நல்லது. வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி ஏற்படும்.

**துலாம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். மாலையில் நண்பர்கள் மூலம் எதிர்பாராத ஆதாயம் கிடைப்பதற்கான வாய்ப்பு உண்டு.

**விருச்சிகம்:** காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டாலும் முடிந்துவிடும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகள் பிடிவாதமாக நடந்துகொண்டாலும் விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது.

**தனுசு:** குடும்பம் தொடர்பான முக்கிய முடிவு எடுப்பதில் பெரியவர்களின் ஆலோசனை அவசியம். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. வியாபாரத்தில் விற்பனை வழக்கம் போலவே இருக்கும். வாடிக்கையாளர்களிடம் கனிவான அணுகுமுறை அவசியம்.

**மகரம்:** எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்புகள் ஏற்படும். தாய்வழி உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். தாயின் உடல்நலனில் கவனம்தேவை. மாலையில் சகோதரர்களிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும்.

**கும்பம்:** தந்தைவழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதரர்களுக்காக சில வேலைகளை எடுத்துச் செய்யவேண்டி வரும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும்.

**மீனம்:** எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர்கள்வகையில் சிற்சில சங்கடங்களைச் சமாளிக்கவேண்டி வரும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகள் பொறுப்பாக நடந்துகொள்வது மகிழ்ச்சிதரும்.

### தேர்தல் தொடர்பில்

# 74 முறைப்பாடுகள் வவுனியாவில் பதிவு

வவுனியா, மே. 6

உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பில் வவுனியா மாவட்டத்தில் 74 முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன என்று வவுனியா மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர் பீ.ஏ.சரத்சந்திர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வவுனியா மாவட்டத்தைப் பொறுத்தவரையில் உள்ளூராட்சித் தேர்தலுக்கான ஏற்பாடுகள் மிகவும் அமைதியாக இடம்பெற்று வருகின்றன. இதுவரை 74 தேர்தல் முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. எனினும், மிகவும் பாரதூரமான முறைப்பாடுகளாக அவை காணப்படவில்லை. அந்த முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்படுகின்றன. (ம-110)

## வெளிநாட்டு படங்களுக்கு 100 வீத வரி விதித்த ட்ரம்ப்

நியூயோர்க், மே 6

வெளிநாடுகளில் தயாரிக்கப்படும் திரைப்படங்களுக்கு அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் 100 சதவீதம் வரி விதித்துள்ளார்.

அமெரிக்க திரைப்படத்துறை மிக வேகமாக அழிவை நோக்கி சென்று கொண்டிருக்கிறது என்று தெரிவித்துள்ள ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், அமெரிக்காவுக்கு வெளியே தயாரிக்கப்படும் அனைத்துத் திரைப்படங்களுக்கும் 100 சதவீதம் வரி விதிக்கப்படுகிறது. இதை உடனடியாக செயல்படுத்த வணிக வரித்துறை மற்றும் வர்த்தக பிரதிநிதிகளுக்கு அதிகாரம் அளித்துள்ளேன் என்று தெரிவித்துள்ளார். நமது திரைப்பட தயாரிப்பாளர்களையும், கலையகங்களையும் அமெரிக்காவில் இருந்து பிரிக்க ஏனைய நாடுகள் அனைத்து வகையான சலுகைகளையும் வழங்குகின்றன. அதனால் ஹொலிவுட் திரைப்படத் துறை அமெரிக்காவுக்குள் பேரழிவுக்கு உள்ளாகின்றது. அமெரிக்காவில் மீண்டும் திரைப்படம் தயாரிக்கவேண்டும் என நாங்கள் விரும்புகிறோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

## நிலநடுக்கம்!

பாகிஸ்தானின் கராச்சி நகரில் உள்ளூர் நேரப்படி நேற்று மாலை 4 மணியளவில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. 4.2 ரிக்டர் அளவில் இந்த நிலநடுக்கம் பதிவானது. (ம)



## சீனாவில் படகு விபத்து நீரில் மூழ்கி 9 பேர் சாவு

பீஜிங், மே 6

தென்மேற்கு சீனாவில் திடீரென வீசிய சூறாவளியால் படகு கவிழ்ந்ததில் 4 சுற்றுலாப் பயணிகள் உட்பட 9 பேர் உயிரிழந்துள்ளனர். குசோயு மாகாணத்தில் உள்ள உயு ஆற்றில் இந்த விபத்து நடந்துள்ளது. 4 படகுகள் கவிழ்ந்ததில் 80 பேர் ஆற்றில் மூழ்கியுள்ளனர். அவர்களில் 9 பேர் உயிரிழந்த நிலையில் ஏனையோர் மீட்கப்பட்டுள்ளனர். (எ-இ)

## மாலைதீவு ஜனாதிபதி சாதனை

மாலே, மே 6

மாலைதீவு ஜனாதிபதி முகமது முய்சு 15 மணிநேரம் தொடர்ச்சியாக ஊடக சந்திப்பு நடத்தி உலக சாதனை படைத்துள்ளார்.

இதற்கு மன்னர் உக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கி 14 மணிநேரம் ஊடக சந்திப்பு நடத்தியதே சாதனையாக இருந்தது. (எ-இ)

## பறிமுதல்

மட்டக்களப்பு, மே 6

மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி பிரதேசத்தில் பாரவூர்தி ஒன்றில் கொண்டு செல்லப்பட்ட ஒரு தொகை அரிசி பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

தேர்தல் காலத்தில் மக்களுக்கு பகிர்ந்தளிப்பதற்காக இந்த அரிசித் தொகை கொண்டுசெல்லப்படுகின்றது என்று மட்டக்களப்பு மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்துக்குக்கிடைத்த முறைப்பாட்டுக்கு அமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அரியை ஏற்றிச்சென்ற பாரவூர்தியும், அதன் சாரதியும் களுவாஞ்சிக்குடிப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

5 கிலோகிராம் நிறையுடைய 250 அரிசி மூடைகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று களுவாஞ்சிக்குடிப் பொலிஸார் தெரிவித்தனர். (எ-இ)

# அணைக்கதவுகள் அடைப்பு நெருக்கடிக்குள் பாகிஸ்தான்

ஜம்மு காஷ்மீரில் செனாப் நதிக்கு குறுக்கே உள்ள பாக்லிஹார் மற்றும் சலால் அணைகளில் இருந்து பாகிஸ்தானுக்குச் செல்லும் நீர் முழுமையாக நிறுத்தப்பட்டுள்ளது. ஜம்முகாஷ்மீரின் பஹல்காம் அருகே உள்ள பைசாரன் பள்ளத்தாக்கில் சுற்றுலாப் பயணிகள் மீது தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலிலுக்கு பதிலடியாகவே இந்தியா நீர் விநியோகத்தைத் துண்டித்துள்ளது.

இந்தத் தாக்குதலை பாகிஸ்தான் ஆதரவு தீவிரவாதிகள் நடத்தியுள்ளனர் என்று குற்றஞ்சாட்டும் இந்தியா, பாகிஸ்தானுக்கு எதிராகப் பல்வேறு நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது. அதில் முக்கியமாக 1960ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட சிந்து நதிநீர் ஒப்பந்தம் இரத்துச் செய்யப்படுகின்றது என்று இந்திய மத்திய அரசு அறிவித்துள்ளது. அதையடுத்து ஜம்மு காஷ்மீரில் ரம்பன் மாவட்டத்தில் செனாப் நதிக்கு குறுக்கேவுள்ள பாக்லிஹார் நீர்மின்சார அணையின் அனைத்துக் கதவுகளும் மூடப்பட்டுள்ளன. ரியாசி மாவட்டத்தில் சலால் அணையின் கதவுகளும் மூடப்பட்டுள்ளன. வடக்கு காஷ்மீரில் ஜீலம் நதிக்கு குறுக்கேவுள்ள கிஷன்கங்கா அணையில் இருந்து வெளியேறும் தண்ணீரும் நிறுத்தப்பட்டுள்ளது.

அணைகளின் நீர் வெளியேற்றக் கட்டுப்பாடுகள் அனைத்தும் இந்திய மத்திய அரசிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

அறிவு கொஞ்சமாக இருந்தாலும் தன்னம்பிக்கையுடன் கூடிய உழைப்பு இருந்தால் எதையும் சாதிக்கலாம்.

– எடிசன் –


# இன்று தீர்ப்பு நாள்!

இலங்கையில் இன்று தேர்தல்நாள். முன்னாள் ஜனாதிபதி ரணிலின் காலத்தில் நடைபெற வேண்டிய உள்ளூராட்சித் தேர்தல் நீதிமன்ற உத்தரவுக்குப் பின்னரும், நிதியின்மை உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் தொடர்ச்சியாகப் பிற்போடப்பட்டுவந்த நிலையில், ஒருவாறாக இன்று நடைபெறுவது உறுதியாகியுள்ளது. உள்ளூராட்சித் தேர்தல் என்றால், ஒருவித மெத்தனப் போக்குடன் நடந்துகொள்ளும் தன்மை பொதுவாக இருக்கவே செய்கின்றது. ஜனாதிபதித் தேர்தலுக்கும், நாடாளுமன்றத் தேர்தலுக்கும் கொடுக்கும் முக்கியத்துவத்தை நாங்கள் உள்ளூராட்சித் தேர்தலுக்குக் கொடுப்பதில்லை. முதலில் இந்தத் தவறான கருத்தியலைக் களைந்துகொள்வது மிகமிக அவசியமாகும்.

ஜனாதிபதித் தேர்தல் எவ்வளவுக்கு முக்கியமோ, நாடாளுமன்றத் தேர்தல் எவ்வளவு தூரம் பேசுபொருளாகின்றதோ அதேயளவுக்கும், அதைவிட மேலாகவும் உள்ளூராட்சித் தேர்தல் பேசுபொருளாகவேண்டும். ஓர் அத்திபாரம் எவ்வளவுக்கெவ்வளவு பலமாக உள்ளதோ அவ்வளவுக்கவ்வளவு கட்டடத்தின் உறுதித்தன்மை நிலைபெறும். உள்ளூராட்சித் தேர்தல் என்பது கட்டடத்தின் அத்திபாரம் போன்றது. அத்திபாரத்தைப் பலப்படுத்தாமல் கட்டடத்துக்கு விதம் விதமாகப் பூச்சுகளைப் பூசுவதால் எந்தப் பயனும் ஏற்படப்போவதில்லை. எனவே, 'இலங்கை' என்ற கட்டடத்தைப் பலப்படுத்தத் தேவையான வலிமையான அத்திபாரத்தை இன்றைய தேர்தல்மூலம் மக்கள் அமைத்துக்கொள்ள வேண்டும்.

அத்துடன், உள்ளூராட்சித் தேர்தல் இன்னொருவகையிலும் தனிச்சிறப்பானது. உள்ளூராட்சித் தேர்தலை சரிவரப் பயன்படுத்தவில்லை என்றோ அல்லது உள்ளூராட்சித் தேர்தலில் பொருத்தமான நபரைத் தெரிவுசெய்வதற்குத் தவறிவிட்டோம் என்றோ மக்கள் சொல்வதற்கு கிஞ்சித்தும் இடமில்லை. ஏனெனில், இங்கே நீங்கள் ஒவ்வொரு வேட்பாளரின் முகமறிந்தே வாக்களிக்கப் போகின்றீர்கள். இன்றைய புள்ளடி எங்கோ இருக்கும் ஒருவருக்கானது அல்ல. உங்களுடைய வட்டாரத்தில், உங்களுக்கு நன்கு பரிச்சயமானவருக்கே இன்றைய புள்ளடிகளை இடப்போகின்றீர்கள். எனவே, அதில் தவறு நேர்ந்துவிட்டால், அதற்கு முதலும் முடிவுமான பொறுப்பாளிகள் நீங்கள்தான். அந்தத் தாற்பரியத்தை உணர்ந்தும் புரிந்தும் இன்றைய தேர்தலை மக்கள் பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.

ஒருநாட்டின் கண்ணியமான குடிமக்களாக இருப்பதற்கு வாக்குரிமையும் பிரதான காரணமாக உள்ளது. வாக்களிப்பது உரிமை என்பதற்கு அப்பால், அது ஜனநாயகக் கடமையுமாகும். எனவே, மக்கள் நேரகாலத்துடன் வாக்குச் சாவடிகளுக்குச் சென்று தமது வாக்குகளைச் செலுத்தவேண்டும். ஏராளமான கேள்விகளுக்கான பதிலை 'தீர்ப்பை' இந்த உள்ளூராட்சித் தேர்தலில் மக்கள் வழங்கவேண்டும்.





# புலிகளின் தங்கத்தை பரிசோதிக்க உத்தரவு

கொழும்பு, மே 6

விடுதலைப்புலிகள் அமைப்பிடம் இருந்து மீட்கப்பட்டு, புலனாய்வுப் பணிப்பாளர் சபையில் வைக்கப்பட்டுள்ள தங்க ஆபரணங்கள் என்று கருதப்படுபவற்றை தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகாரசபைக்கு அனுப்பிப் பரிசோதித்து அறிக்கையிடுமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் சார்பாக விடுவிக்கப்பட்ட கோரிக்கையைப் பரிசீலித்த கொழும்பு நீதவான் நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது. (எ-இ)



# நாணய மாற்று விகிதம்

கொழும்பு, மே 6

இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்டுள்ள நாணயமாற்று விகிதத்தின் அடிப்படையில் அமெரிக்க டொலரின் விற்பனை விலை 303.6974 ரூபாவாகவும் கொள்வனவு விலை 295.2043 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது. ஸ்ரேலிங் பவுண்ட் ஒன்றின் விற்பனை விலை 405.1289 ரூபாவாகவும், கொள்வனவு விலை 390.8724 ரூபாவாகவும் காணப்பட்டது. யூரோ ஒன்றின் விற்பனை விலை 345.9647 ரூபாவாகவும், கொள்வனவு விலை 332.8579 ரூபாவாகவும் காணப்பட்டது. (எ-இ)

# உள்ளூராட்சித் தேர்தல் 4,628 முறைப்பாடுகள்

கொழும்பு, மே 6

உள்ளூராட்சிச்சபைத் தேர்தல் தொடர்பில் நேற்றுமுன்தினம் வரை 4 ஆயிரத்து 628 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக 35 முறைப்பாடுகளும், தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பாக 4 ஆயிரத்து 284 முறைப்பாடுகளும், ஏனைய விடயங்கள் தொடர்பாக 309 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (எ-இ)



# சாமர சம்பத்துக்கு மறியல் நீடிப்பு

கொழும்பு, மே 6

ஊழல் மோசடி வழக்கில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சமார சம்பத் தசநாயக்கவின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

நேற்று இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது பதுளை நீதிமன்றம் சாமர சம்பத் தசநாயக்கவின் விளக்கமறி யலை எதிர்வரும் 19ஆம் திகதி வரை நீடித்தது. (எ-இ)

# அழகிப்போட்டியில் அவுடி குணசேகர

கொழும்பு,மே 6

இந்தியாவின் ஹைதராபாத் நகரில் இம்மாதம் 7ஆம் திகதி முதல் நடைபெறவுள்ள உலக அழகிப்போட்டியில் இலங்கையின் சார்பில் அவுடி குணசேகர கலந்துகொள்ளவுள்ளார். அநுராதபுரத்தைப் பிறப்பிடமாகக்கொண்ட இவர் களனிப் பல்கலைக்கழகத்தில் சர்வதேச உறவுகள் கற்கைநெறியில் பட்டப்படிப்பை பூர்த்தி செய்தவரா வார். (எ-33-6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5 மாதங்களில் 29 பேர் கொலை
# நேற்றுக்காலையும் பயங்கரம்!

கொழும்பு, மே 6

**துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களால் தென்னிலங்கையில் கொலைக் கலாசாரம் கோலோச்சியுள்ள நிலையில், நேற்றும் 19 வயது டைய இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.**

இந்தச் சம்பவத்தோடு இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதிக்குள் 29 பேர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். 42 துப்பாக்கிச்சூட்டு சம்பவங்களும் பதிவாகியுள்ளன.

கொழும்பு, கல்கிஸ்ஸைப் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில், 19 வயதான பிரவீன் நிஷாங்க என்பவரே கொல்லப்பட்டுள்ளார். இவர் தெஹிவளை, கல்கிஸ்ஸை மாநகரசபையில் ஊழியராகப் பணியாற்றி வந்துள்ளார்.

வழமைபோல நேற்று காலையும் வீதி சுத்திகரிப்பில் ஈடுபட்டுக்கொண்டிருக்கையில், மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அவர்மீது துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளனர். துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்கான இளைஞர் ஓடுவதற்கு முற்பட்டவேளை, அவரை துரத்திச்சென்று மறுபடியும் சரமாரியாக துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது. இந்தச் சம்பவத்தால் கல்கிஸ்ஸை பகுதியில் நேற்று காலை பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இரு போதைப் பொருள் வியாபார கும்பல்களுக்கிடையிலான மோதலின் விளைவாக இந்தக் கொலை இடம்பெற்றிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர். உயிரிழந்த இளைஞனின் தாயார், போதைப்பொருள் வியாபாரத்துடன் தொடர்புடையவர் என சந்தேகிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றனர். 29 கொலைகளில் போதைப்பொருள் மற்றும் பாதாளக் குழுக்களுடன் தொடர்புடையவர்களே பெருமளவில் உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-44)

# உரமானியம் தாமதம் விவசாயிகள் விசனம்

கொழும்பு, மே 6

சிறுபோக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், இதுவரையில் உரமானியம் வழங்கப்படவில்லை என்று விவசாயிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

சிறுபோக நெற்செய்கைக்காக 15 ஆயிரம் மெற்றிக் தொன் உரம் தேவை என்று விவசாய அமைப்புகள் தெரிவித்துள்ளன. உரம் ஒரு மாதத்துக்கு முன்பாகவே வழங்கப்பட்டிருக்கவேண்டும் என்றும் அந்த அமைப்புகள் குறிப்பிட்டுள்ளன.

உரிய காலப்பகுதிக்குள் உரம் வழங்கப்படாமையால் எதிர்பார்த்தளவு விளைச்சலைப் பெறமுடியாது. மானிய விலையில் உரம் வழங்கப்படாததால் அதிக விலைக்கு உரத்தைக் கொள்வனவு செய்யவேண்டியுள்ளது என்றும் விவசாயிகள் தெரிவித்துள்ளனர். (எ-33-இ)




# பாதுகாப்புக் காரணங்களால் ஸ்டார்லிங்க் சேவை தாமதம்

கொழும்பு, மே.6

பாதுகாப்புக் காரணங்களுக்காகவே ஸ்டார்லிங்க் இணையசேவையை அனுமதிப்பதில் தாமதம் ஏற்படுகிறது என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

தற்போது இலங்கையில் தொலைத்தொடர்பு சேவையை வழங்கும் நிறுவனங்கள் மிகவும் சிறப்பான முறையில் செயற்பட்டுவருகின்றன. அறுகம்பே தாக்குதல் முயற்சி, அண்மையில் நீதிமன்றத்தினுள் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் போன்றவற்றில் தொலைத்தொடர்பு நிறுவனங்களின் உதவியுடன் உடனடியாக நடவடிக்கை எடுக்கமுடிந்தது. ஆனால் ஸ்டார்லிங்க் இணைய சேவையில் இந்த வசதி இல்லை. ஸ்டார்லிங்க் இணையசேவையிடம் தகவலைப் பெற்றுக்கொள்ளும் அதிகாரம் எமக்கு இல்லை.

நாங்கள் இணையசேவையிடம் தகவலைப் பெற்றுக்கொள்ளும் அதிகாரத்தை வழங்கவேண்டும் என்று கேட்டிருக்கிறோம், பொறுத்திருந்து பார்ப்போம்-என்றார். (எ-33-6)

# சபாநாயகரின் இல்லத்தில் செலவு பாதியாகக் குறைப்பு

கொழும்பு, மே 6

சபாநாயகரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் உணவு மற்றும் பானங்கள் போன்றவற்றின் செலவு சுமார் ஐம்பது சதவீதம் குறைக்கப்பட்டுள்ளது என்று நாடாளுமன்றத் தகவல்கள் தெரிவித்தன.

கடந்த காலங்களில் உத்தியோகபூர்வ இல்லத்தில் உணவு மற்றும் பானங்களுக்காக மாதந்தோறும் 3 இலட்சம் ரூபாவுக்கும் அதிக நிதி செலவிடப்பட்டது என்று கூறப்படுகின்றது. தற்போது சபாநாயகர் அந்த இல்லத்தில் வசிப்பதில்லை என்று முடிவுசெய்துள்ளார் என்றும், வார இறுதி நாள்களில் மட்டுமே அங்கு சென்று வெளிநாட்டுத் தூதர்களைச் சந்திக்கும் நடவடிக்கைகளில் பங்கேற்பார் என்றும் கூறப்படுகிறது.

சபாநாயகரின் அதிகாரப்பூர்வ இல்லத்தின் தோட்டத்தில் உள்ள மரங்கள், புதர்கள் மற்றும் புல்வெளிகளைப் பராமரிப்பதற்கு குழாய் நீரைப் பயன்படுத்தாது, அதிகாரப்பூர்வ இல்லத்தைச் சுற்றி அமைந்துள்ள நீர்த்தேக்கத்திலிருந்து வரும் தண்ணீரை மட்டுமே பயன்படுத்தவேண்டும் என்றும் சபாநாயகர் அறிவுறுத்தியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)



# உடைமையில் ஹெரோய்ன் ஒருவர் கைது

அம்பாறை மாவட்டம் நிந்தவூர் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அட்டப்பளம் பகுதியில் ஹெரோய்ன் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கடந்த சனிக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சாகாமம் விசேட அதிரடிப் படை அதிகாரிகளுக்குக் கிடைத்த இரகசியத்தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையில் சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரிடம் இருந்து ஒரு கிராம் 160 மில்லிகிராம் ஹெரோய்ன் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-33-இ)

# கடமைக்கு இடையூறு ஒருவர் கைது

கட்டுநாயக்க விமான நிலையத்தில் சுங்க அதிகாரிகளின் பணிக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்த நபரிடம் இருந்து சட்டவிரோதமாக நாட்டுக்குள் கொண்டுவந்த வெளிநாட்டு சிகரெட்டுக்கள் மற்றும் மதுப் போத்தல்கள் சுங்க அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன. சுங்க அதிகாரிகள் அவரைக் கைது செய்து தங்களது கடமையை ஆரம்பித்த போது, அவர் அவற்றைத் தரையில் எறிந்து, சுங்க அதிகாரிகளைத் தடுத்துள்ளார்.

அதையடுத்து அந்த நபர் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டுள்ளார். (எ-இ)

# அநுர தொடர்பில் கருத்து துசித்த மீது முறைப்பாடு

கொழும்பு, மே 6

தேசிய லொத்தர் சபையின் முன்னாள் பதில் பணிப்பாளர் துசித்த ஹல்லோலுவவுக்கு எதிராக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. ஜனாதிபதி கிரீஸில் குறிப்பிடத்தக்க முதலீடு செய்துள்ளார் என்று துசித ஹல்லோலுவா அண்மையில் தெரிவித்திருந்தமை தொடர்பாகவே விசாரணை நடத்தக்கோரியே குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. துசித ஹல்லோலுவ, ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தின் கீழ் ஜனாதிபதி செயலகத்தில் இணைக்கப்பட்ட அதிகாரியாக பணியாற்றியவராவார். ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைவாக இந்த முறைப்பாட்டை சட்டத்தரணி அகலங்க உக்வத்தே, ஜனாதிபதி சட்டத்தரணி உபுல் குமாரப்பெருமவுடன் இணைந்து பதிவு செய்துள்ளார். ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் பெயரைப் பயன்படுத்தி வெளியிடப்பட்ட மேற்படி கருத்துகள், ஜனாதிபதியின் நற்பெயருக்கு பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும் என்பதால், துசித ஹல்லொலுவ மற்றும் அந்தக் கருத்துகளை சமூக ஊடகங்களின் வாயிலாக பரப்ப நடவடிக்கை எடுத்த சமூக ஊடகச் செயற்பாட்டாளர்கள் தொடர்பில் துரித விசாரணை நடத்தி, சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அந்த முறைப்பாட்டில் கோரப்பட்டுள்ளது. (எ-இ)

# எரிபொருள் விநியோகத்துக்கு விரைவில் மாற்றுக்குழாய்கள்

கொழும்பு, மே 6

கொழும்புத் துறைமுகத்தின் தெற்கு முனையத்திலிருந்து கொலன்னாவக் களஞ்சியசாலைக்கு எரிபொருளைக் கொண்டுசெல்லும் நிலத்தடிக்குழாயில் அடிக்கடி கசிவு ஏற்படுவதை அடுத்து, மாற்றுக்குழாய்களை அமைப்பது தொடர்பாக அதிகாரிகள் அவதானம் செலுத்தியுள்ளனர். புதிய குழாய்களை இறக்குமதி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று இலங்கை கனியவளக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஜனக ராஜகருணா தெரிவித்துள்ளார்.

கொழும்புத் துறைமுகத்தின் தெற்கு முனையத்திலிருந்து கொலன்னாவக் களஞ்சியசாலைக்கு எரிபொருளைக் கொண்டுசெல்லும் 2 குழாய்களில் கடந்த 15 ஆம் திகதி கசிவு ஏற்பட்டது. இலங்கை கனியவளக் கூட்டுத்தாபனத்தின் ஊழியர்கள் எரிபொருள் கசிவைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்திருந்ததுடன், கசிந்த எரிபொருளைச் சேமிக்கவும் நடவடிக்கை எடுத்திருந்தனர். ஆயினும் மூன்று மாதங்களின் பின்னர் மீண்டும் கசிவு ஏற்பட்டுள்ளது. இந்தக் கசிவால் எரிபொருள் கடல் நீருடன் கலப்பதை அவதானிக்கமுடிகின்றது என்றும் இலங்கை கனியவளக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் தெரிவித்துள்ளார். (எ-33-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்

வணிகமாணி சிறப்பு பட்டப்படிப்பு – 2023/ 2024
Bachelor of Commerce Honours Degree Programme – 2023/2024

**புதிய அனுமதிக்கான விண்ணப்பம் - 2025 – அணி – IX**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தினால் நடாத்தப்படும் புதிய பாடத்திட்டத்தின் கீழ் அமைந்த நான்கு வருட கால வணிகமாணி சிறப்புக் கற்கைநெறிக்கு புதிய மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**அனுமதிக்கான தகைமைகள்:**

- க.பொ.த. (உ/த) பரீட்சை (வணிகப்பிரிவு) – 2023 அல்லது அதற்கு முன்னர் சித்தியடைந்து பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதியானவர்கள்.

அல்லது

- பல்கலைக்கழக மூதவையினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய க.பொ.த. (உ/த) பரீட்சைக்கு சமமான தகைமையைக் கொண்டவர்கள்

**வணிகமாணியில் பாட அலகுகளிற்கான விலக்களிப்புக் கோருதல்:**

வணிகமாணி கற்கை நெறியில் காணப்படும் பாட அலகுகள் அல்லது அதற்குச் சமனான பாட அலகுகளை உள்ளடக்கிய கற்கை நெறிகளில் சித்தியடைந்தோர், உரிய தகைமைகளைக் குறிப்பிட்டு விலக்களிப்புக்கு விண்ணப்பிக்க முடியும். அவர்கள் தகைமை பல்கலைக்கழக மூதவையினால் ஏற்றுக்கொள்ளப்படும் சந்தர்ப்பத்தில் பாட அலகுகளிற்கான விலக்களிப்பு அனுமதிக்கப்படும்.

**மாணவர் தெரிவு:**

விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப, பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளியின் அடிப்படையில் (Z-Core) அல்லது பொது உளச்சார்புப்பரீட்சை அல்லது நேர்முகப் பரீட்சை அல்லது மூன்றின் மூலமும் தெரிவு செய்யப்படுவார்கள். பொது உளச்சார்புப் பரீட்சைக்கான தேவை ஏற்படின் பரீட்சை நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

**விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பித்தல்:**

விண்ணப்பக் கட்டணமாக ரூபா 1000.00 இனை 89009208000060 என்ற மக்கள் வங்கிக் கணக்கிலக்கத்தில் செலுத்தி www.codl.jfn.ac.lk எனும் இணைய முகவரியில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை முறையாக பின்பற்றி https://forms.gle/4DU71XQRL8uv8vP19 எனும் இணைப்பின் ஊடாக விண்ணப்பித்துக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

**விண்ணப்ப முடிவுத்திகதி : 21.07.2025 (திங்கட்கிழமை) (விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது)**

மேலதிக விபரங்களை 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணூடாக அல்லது www.codl.jfn.ac.lk எனும் இணையத்தளத்தில் பெற்றுகொள்ளலாம்.

**பதிவாளர்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**திருநெல்வேலி**
05.05.2025

(CR/449936) J-1


# விபத்துகளைத் தடுப்பதற்காக வேகக்கட்டுப்பாட்டு பொறிமுறை

## வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 6

வீதிவேகக் கட்டுப்பாட்டுப் பொறிமுறைகளை உருவாக்கி விபத்து களைத் தடுக்கவேண்டும் என்று வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடம் ஞானவைரவர் கோவிலடி சனசமூக நிலையம் கடிதம் மூலம் கோரியுள்ளது.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது–

உரும்பிராய் சந்தியில் இருந்து கோப்பாய் நோக்கிச்செல்லும் வீதியில் 200 மீற்றர் தொலைவில் ஞானவைரவர் கோயில் சனசமூக நிலையம், தனியார் கல்வி நிலையம், கடைகள் என்பன வீதியில் இரு புறத்திலும் நெருக்கமாக அமைந்துள்ளன. ஞானவைரவர் கோயிலையும், ஞானவைரவர் சனசமூக நிலையத்தையும் இணைத்து பாதசாரிக்கடவை வீதிக்கு குறுக்கே அமைக்கப்பட்டுள்ளது. ஆனால், சுமார் 50 மீற்றர் தொலைவில் வீதி வளைவு உள்ளது. இந்தவளைவால் கோப்பாய் பகுதியில் இருந்து உரும்பிராய் நோக்கிவரும் வாகனங்களின் சாரதிகள் வேகத்தைக் கட்டுப்படுத்தத் தவறிவிடுகின்றனர். பாதசாரிக் கடவையால் வீதியை கடப்பவர்கள்கூட வாகனங்களால் மோதப்படும் நிகழ்வு அடிக்கடி நடைபெறுகின்றன. எனவே பொருத்தமான வேகக்கட்டுப்பாட்டுப் பொறிமுறைகளை அமைக்கவேண்டும் –என்றுள்ளது. (எ-33)


**வீடு வாடகைக்கு தேவை**

ஆரியகுளம் பகுதி, நல்லூர் குறுக்குவீதி, மற்றும் பொஸ்கோ பாடசலையை அண்மித்த இடங்களில் அவசரமாக வீடு வாடகைக்கு தேவை.

தொடர்புகளுக்கு: 0779687562
0759597184

(CS/58174) D

**காணி விற்பனைக்கு**

மருதனார்மடம் விளாத்தி அடி, உரும்பிராய் கிராமம் உரும்பிராய் வடக்கு J/164 கோப்பாய் Ds பிரிவில் 4 பரப்பு 16.69 குளி, வெற்றுக் காணி, பயிர்செய்கைக்கும் வீடு கட்டுவதற்கும் ஏற்றது. உறுதி பிரக்கராசியுடன்

தொடர்புகளுக்கு:
திரு.ஆதித்தன்:
077 616 9254 (வட்ஸ் அப்)
டாக்டர் அரஸ்:
+44 794 141 9205(வட்ஸ் அப்)
திரு.டினேஸ்:
+94 77 087 0837 (வட்ஸ் அப்)


# இந்தியா பாகிஸ்தான் ஏட்டிக்கு போட்டி

கராச்சி, மே 6

பாகிஸ்தானுக்கு எதிராக இந்தியா எடுக்கும் நடவடிக்கைகளுக்கு பாகிஸ்தானும் எதிர்வினையாற்றிவருகின்றது.

இந்தியத் துறைமுகங்களுக் குள் பாகிஸ்தான் கொடியுடன் கூடிய கப்பல்கள் வருவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், இந்தியக் கொடியுடன் வரும் எந்தக் கப்பல்களும் பாகிஸ்தான் துறைமுகங்களுக்குள் அனுமதிக்கப்படாது என்று பாகிஸ்தான் அறிவித்துள்ளது.

ஜம்மு காஷ்மீரில் நடத்தப்பட்ட தீவிரவாதத் தாக்குதலை அடுத்து இரு நாடுகளும் ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்பட்டுவருவதால் பிராந்தியத்தில் பதற்றமான நிலைமை ஏற்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. (எ-இ)


# மரண அறிவித்தல்

தோற்றம்
03 . 07 . 1944



மறைவு
04 . 05 . 2025

## பொன்னம்பலம் நடராசா (சோமு)

**(உசன் ஞான பைரவர் தர்மகர்த்தா, தவசிக்குளம் அம்மா பல்பொருள் வாணிப ஸ்தாபகர்)**

உசனைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் நடராசா அவர்கள் (04/05/2025) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - பூரணம் தம்பதியினரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற இராஜலட்சுமியின் (மலர்) அன்புக் கணவரும், ரோசனா, சபேசன், லோபனா, சோபனா, யஸ்மினா ஆகியோரின் அன்புத்தந்தையும், ஸ்ரீகாந்தன், தீபா, சுதாகர், சதீஸ், அசோக ஆகியோரின் அன்பு மாமனாரும், அபிஷா, அபினாஸ், பைரவி, பைறீஸ், லயன், அர்த்திகா, அகரன், துவாரகா, பூர்விகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06/05/2025) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஈச்சன்காடு இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மலர்முற்றம்**
**உசன், மிருசுவில்.**

**தகவல் : குடும்பத்தினர்**
**சுஜிந்தன்** - 076 370 7417
**சுதாகர்** - 077 665 6006

# மரண அறிவித்தல்

தோற்றம்
27 . 02 . 1957



மறைவு
01 . 05 . 2025

## T.K பாலசுப்பிரமணியம் (பாலா)

மலேசியா, கோலாலம்பூரைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் தொல்புரம், சுழிபுரத்தினை வசிப்பிடமாகவும், தற்போது பிரான்சை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி பாலசுப்பிரமணியம் கடந்த (01.05.2025) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் கந்தசாமி - மனோன்மணி தம்பதியரின் புதல்வரும், யாழ்ப்பாணம், சுண்டிக்குளி, விதானையார் வீதி, ஈச்சமோட்டையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சிவராசா - நவநீதம் தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற சிவசிறோன்மணியின் அன்புக் கணவரும், பாகுலன், பானுஜன் ஆகியோரின் அன்புத் தந்தையும், திருச்செல்வம், கனகசூரியர், முத்துக்குமாரு ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பிரான்சில் எதிர்வரும் (09.05.2025) வெள்ளிக்கிழமை இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.


**முத்துக்குமாரு - 491 748 125 989**
**திருச்செல்வம் - 601 63712 762**
**கனகசூரியர் - 077 632 3881**

**தகவல்**
**குடும்பத்தினர்**

(CS/58173) J-1


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அல்காட்ராஸ் சிறையை மீளவும் திறக்கும் ட்ரம்ப்!



**நியூயோர்க், மே 6**

**அமெரிக்காவின் மிகவும் பிரபலமான சிறைச்சாலைகளில் ஒன்றான அல்காட்ராஸ் சிறைச்சாலையை மீண்டும் திறப்பதற்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உத்தரவிட்டுள்ளார்.**

கொடூரமான குற்றவாளிகளை அடைத்து வைக்கப் பயன்படுத்தப்படும் இந்தச் சிறைச்சாலை, கலிபோர்னியா கடற்கரையில் உள்ள ஒரு தீவில் உள்ளது. பராமரிப்புச் செலவுகள் மற்றும் கட்டடங்களின் பழுதுகள் காரணமாக 1963ஆம் ஆண்டு மூடப்பட்ட இந்தச் சிறைச்சாலை, தற்போது சுற்றுலாத்தலமாக செயற்படுகிறது.

தற்போது அமெரிக்காவில் வன்முறை அதிகரித்து வருவதால், குற்றவாளிகளைத் தனிமைப்படுத்துவதற்காக அல்காட்ராஸை கட்டமைத்து, விரிவுபடுத்தி மீண்டும் திறக்க அமெரிக்க ஜனாதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஏ-இ)

# தாக்கினால் பதிலடி மிரட்டுகிறது ஈரான்

கொழும்பு, மே 6

அமெரிக்கா அல்லது இஸ்ரேல் தாக்குதல் நடத்தினால் நாங்கள் பதிலடி கொடுப்போம் என்று ஈரான் எச்சரித்துள்ளது.

ஹமாஸ் அமைப்புக்கு ஆதரவான ஹவுதி அமைப்பு, இஸ்ரேலின் டெல் அவிவ் நகரில் உள்ள பென்குரியன் சர்வதேச விமான நிலையத்தை இலக்குவைத்து, ஏமனிலிருந்து ஏவுகணை தாக்குதல் நடத்தியுள்ளது. இந்தத் தாக்குதலுக்கு ஏழு மடங்கு பதிலடி தரப்படும் என்று இஸ்ரேல் எச்சரித்திருந்தது. ஹவுதி அமைப்புக்கு எதிராகப் பெரும் தாக்குதல் நிச்சயம் நடத்தப்படும் என்று இஸ்ரேல் பிரதமர் கூறியிருக்கின்றார்.

இந்தநிலையில், அமெரிக்கா அல்லது இஸ்ரேல் தாக்குதல் நடத்தினால் நாங்கள் பதிலடி கொடுப்போம் என ஈரான் பதிலுக்கு எச்சரித்துள்ளது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த ஈரானின் பாதுகாப்புத்துறை அமைச்சர் அஜீஸ் நசீர்சாதே, இந்தப் போரை அமெரிக்கா அல்லது இஸ்ரேல் தொடங்கினால், ஈரான் அவர்களின் தளங்கள் மற்றும் படைகளை எங்கிருந்தாலும், எப்போதுவேண்டுமானாலும் குறிவைக்கும் என்று கூறியிருக்கின்றார். (ஏ-இ)

## INVITATION FOR BIDS
## MARITIMEPATTU - PRADESHIYA SABHA


1. The Chairman, Local Authority Procurement Committee and The Chairman, Divisional Procurement Committee on behalf of the Secretary, Maritimepattu Pradeshiya Sabha, Kovilkudiyiruppu, Mullaitivu invites sealed bids from eligible and qualified bidders for the works described in the table below. All the relevant details are described in the same table.
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB)
3. Qualification' requirements are indicated in section 4 of the Procurement Document. Additional details are provided in the Section 5 of the Procurement Document.
4. Interested bidders may obtain further information from address given below in 6 and inspect the bidding documents at the same place on any working days from during the document issuing period mentioned in table below between 09:00 hrs and 15:00 hrs.

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | Document Issuing/Purchasing Period | | | From 06.05.2025 until 19.05.2025 | | | | | |
| | | Pre-Bid Conference | | | At 10.30 A.M on 14.05.2025 | | | | | |
| | | Closing and Opening of Bids | | | At 10.30 A.M on 20.05.2025 | | | | | |
| S/No | Bid ID | Description of Work | Source of Fund | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Required CIDA Grade & Speciality | Non-Refundable Fee (Rs.) | Bid Validity Period upto | Required Bid Security Amount (Rs.) | Required Bid Security Validity Period |
| 01 | NP/14/44(01)02/03/C.F/CAPITAL/2025/07 | Construction of Open Stage at Sea Site Mullaitivu | Council Fund | 3.64 | 77 | C9 or Above (Building) | 3,000.00 | 06-Jul-2025 | 55,000.00 | 03-Aug-2025 |
| 02 | NP/14/44(01)02/03/C.F/CAPITAL/2025/08 | Renovation of Vehicle shed and landscaping at Sub Office Mullaitivu | Council Fund | 1.27 | 49 | C9 or Above (Building) | 1,000.00 | 06-Jul-2025 | 19,000.00 | 03-Aug-2025 |
| 03 | NP/14/44(01)02/03/C.F/CAPITAL/2025/09 | Construction of public toilet at Welioya | Council Fund | 1.69 | 49 | C9 or Above (Building) | 1,000.00 | 06-Jul-2025 | 26,000.00 | 03-Aug-2025 |
| 04 | NP/14/44(01)02/03/C.F/CAPITAL/2025/10 | Construction of Beef and Chicken Shop at Silawaththai Market | Council Fund | 2.71 | 77 | C9 or Above (Building) | 3,000.00 | 06-Jul-2025 | 41,000.00 | 03-Aug-2025 |
| 05 | NP/14/44(01)02/03/DE.RE/CAPITAL/2025/03 | Renovation of Tsunami Memorial at Mulliyawalai | Council Fund | 1.27 | 49 | C9 or Above (Building) | 1,000.00 | 06-Jul-2025 | 20,000.00 | 03-Aug-2025 |
| 06 | NP/14/44(01)02/03/DE.RE/CAPITAL/2025/04 | Construction of Mutton Slaughter House At Mulliyawalai | Council Fund | 0.59 | 49 | C9 or Above (Building) | 1,000.00 | 06-Jul-2025 | 9,000.00 | 03-Aug-2025 |
| 07 | NP/14/44(01)02/03/DE.RE/CAPITAL/2025/05 | Mulliwaikkal Compose yard Fencing Work | Council Fund | 1.52 | 49 | C9 or Above (Building) | 3,000.00 | 06-Jul-2025 | 23,000.00 | 03-Aug-2025 |
| 08 | NP/14/44(01)02/03/DE.RE/CAPITAL/2025/07 | Construction of Head Office Internal Road MPPS | Council Fund | 2.03 | 77 | C9 or Above (Highway) | 3,000.00 | 06-Jul-2025 | 31,000.00 | 03-Aug-2025 |
| 09 | NP/14/44(01)02/03/DE.RE/CAPITAL/2025/08 | Renovation of Wedding Hall | Council Fund | 1.05 | 49 | C9 or Above (Building) | 1,000.00 | 06-Jul-2025 | 16,000.00 | 03-Aug-2025 |

5. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Secretary, Maritimepattu - Pradeshiya Sabha, Kovilkudiyiruppu, Mullaitivu (T.P:0212290001, email: pskpattu@gmail.com)from 9:00 hrs to 15:00 hrs during the period stated in table above upon payment of non-refundable fees as mentioned in the table. The method of payment will be by cash.
6. Bids (Original & Duplicate) S/No from 01 to 04 must be delivered to the Chairman, Local authority Procurement Committee, Maritimepattu Pradeshiya Sabha, Kovilkudiyiruppu, Mullaitivu and Bids (Original & Duplicate) S/No from 05 to 07 must be delivered to the Chairman, Divisional Procurement Committee, Maritimepattu Pradeshiya Sabha, Kovilkudiyiruppu, Mullaitivu on or before 10.30 P.M as stated in table above. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend Maritimepattu Pradeshiya Sabha, Kovilkudiyiruppu, Mullaitivu
7. Pre-Bid Conference will be held at Conference Hall, Maritimepattu Pradeshiya Sabha, Kovilkudiyiruppu, Mullaitivu commencing at 10.30 AM as stated in table above.
8. All Bids must be accompanied by either Bid security as per the information given in the Tables.

Chairman
Local Authority Procurement Committee& Divisional Procurement Committee,
Maritimepattu Pradeshiya Sabha,
Kovilkudiyiruppu, Mullaitivu.

06.05.2025



# தங்கச்சுரங்கத்திலிருந்து மீட்கப்பட்ட 13 உடல்கள்

லிமா, மே 6

பெருவில் உள்ள தங்கச் சுரங்கம் ஒன்றில் இருந்து சுரங்கத்தொழிலாளர்கள் 13 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. சுரங்கத்தைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயன்ற குற்றவியல் கும்பலால் இவர்கள் கடத்தப்பட்டுக் கொல்லப்பட்டுள்ளனர் என்று அந்த நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பெருவின் தலைநகர் லிமாவின் வடக்கே உள்ள படாஸ் மாகாணத்தில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது. அந்தக் குற்றக்கும்பல் 13 பேரையும் ஒரு வாரமாகப் பணயக் கைதிகளாக வைத்திருந்ததுடன், சுரங்கத்தொழிலாளர்களின் உறவினர்களுக்கு, அச்சுறுத்தும்வகையிலான குறுந்தகவல்களை அனுப்பியுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. கடந்த சில ஆண்டுகளில் பெருவில் சுரங்கங்களைத் தாக்கும் குற்றக்கும்பல்கள் அதிகரித்துள்ளன என்று அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (ஏ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

மலர்வு 21.12.1949



உதிர்வு 04.05.2025

## நல்லம்மா சிவயோகநாதன்

மயிலிட்டி தெற்கை பிறப்பிடமாகவும் உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லம்மா சிவயோகநாதன் (செல்வராணி) அவர்கள் 04.05.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று இரவு இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றர்களான மயிலிட்டி தெற்கு கட்டுவனைச் சேர்ந்த நாகலிங்கம் - இலக்ஸ்மி தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான உடுவிலைச் சேர்ந்த கந்தையா (சுப்பிரமணியம் மாஸ்ரர்) - இரத்தினம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும் சிவயோகநாதனின் (U.K) அன்பு மனைவியும் வினோத் (MBA, Admin Assistant U.K Urbanpoint Property Management Ltd), ஜனாத் ((ACCA) Senior Lead Accountant, WS02 Lanka(Pvt) Ltd) கணாத் (VFX Artist, Kanath VFX Studio U.K), ஆகியோரின் அன்புத்தாயாரும் ஜனனி (U.K) யின் அன்பு மாமியாரும் ஆவார்.

காலஞ்சென்றவர்களான தவமணி, மற்றும் கனகாம்பிகை, காலஞ்சென்ற தவராசா மற்றும் செல்வராசா, செல்வரத்தினம் ஸ்ரீமுருகராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான நவரத்தினம், நல்லையா, பவளம்மா மற்றும் சிவஜோதி (பேபி) அனுஷா, ஸ்ரீதேவி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 06.05.2025 செவ்வாய்க்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும் இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

Address
No 9, 1st cross Street
church lane
malvam uduvil

தகவல்:
குடும்பத்தினர்
0773845099

(CS/3122) D

# மரண அறிவித்தல்

பிறப்பு 06.10.1949



இறப்பு 05.05.2025

## லோகநாதக்குருக்கள் புவனேஸ்வரியம்மா

குருக்கள் பகுதி கரணவாய் கரவெட்டியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட லோகநாதக்குருக்கள் புவனேஸ்வரியம்மா 05.05.2025 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சபாபதிதேசிகர் - தங்கம்மா தம்பதிகளின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற சிவப்பிரகாசத்தின் சகோதரியும், காலஞ்சென்ற லோகநாதக்குருக்களின் (முன்னாள் பிரதம குரு நுணுவிற் பிள்ளையார் கோயில் - கரவெட்டி) பாசமிகு மனைவியும், அனுஷலா, அனுஷா, சுரேந்திரதேசிகர் ஆகியோரின் தாயாரும் காலஞ்சென்ற பரமேஸ்வரன், வசந்தநாதக்குருக்கள், தனுஷா ஆகியோரின் மாமியாரும், பிரணிகா, பிரவீன், பானுஷாயினி, அபிலாஷன், வினுஷ, நர்த்தனசர்மா, ஆருஷன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 06.05.2025 அன்று குருக்கள் பகுதி கரணவாயில் 10 மணிக்கு ஆரம்பமாகி தகனக் கிரியைக்காக கிராய் இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும்.

தகவல்:
லோ. சுரேந்திரதேசிகர (மகன்)
0777393075

(CS/3120) D

## யாத்திரை சென்ற பெண் தவறி வீழ்ந்து உயிரிழப்பு

சிவனொளிபாத மலைக்கு யாத்திரைக்கு சென்ற பெண்ணொருவர் கீழே விழுந்து உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். வல்பிட்ட பிரதேசத்தைச் சேர்ந்த 47 வயதுடைய குடும்பப்பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். உயிரிழந்த பெண் தனது கணவர், குழந்தைகள் மற்றும் கிராமவாசிகள் குழுவுடன் யாத்திரை சென்றிருந்த நிலையில், யாத்திரை முடிந்து திரும்பும் போது இந்த விபத்து நடந்துள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் நல்லதண்ணி பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

(எ-இ)



யாழ். தாவடி ஸ்ரீ பத்திரகாளி அம்மன் தேவஸ்தான மஹோற்சவக் கொடியேற்றம் கடந்த செவ்வாய்க்கிழமை பக்திபூர்வமாக இடம்பெற்றது. கொடியேற்ற வழிபாடுகளில் நூற்றுக்கணக்கான பக்தர்கள் உட்பட தென்னிந்திய திரைப்பட நடிகரான ஜெய் ஆகாஷ் உட்பட கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச- 25,27)

## குருதிக்கொடை

யாழ்ப்பாணம்,மே 6

யாழ்.மாவட்டச் செயலக நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் வருடாந்த குருதிக்கொடை நிகழ்வு யாழ். போதனா மருத்துவமனை குருதிக் காப்பகப் பிரிவின் பங்குபற்றுதலுடன் மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. (ச-25, 9)





நாவற்குழி கிழக்கு ஞான வைரவர் கோவிலின் சித்திரைப் பரணி உற்சவம் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. அபிஷேக ஆராதனைகளும் சுவாமி வீதியுலாவும் இடம்பெற்றன. தொடர்ந்து அன்னதானமும் வழங்கப்பட்டது. (ச-33-159)



இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திசபை வட மாகாண காரியாலயத்தினால் பச்சிலைப் பள்ளிப் பிரதேச தொழில் முயற்சியாளர்களுக்கான மரக்கறிகள் மற்றும் பழங்கள் பதனிடல் தொடர்பான தொழில்நுட்பப் பயிற்சி, பிரதேச செயலக சிறிய மாநாட்டு மண்டபத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. (25,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

Faculty of Allied Health Sciences
Aptitude / Practical Test for the Selection of candidates for the Bachelor of Science Honours in Physical Education Degree Programme
Academic Year 2024/2025
Medium: English

Applications to follow the above Degree Programme are hereby invited from suitable candidates who possess the minimum university admission requirements for the Academic Year 2024/2025.

**Eligibility for Admissions**

Candidates who wish to follow the Bachelor of Science Honours in Physical Education should have obtained at least three "S" grades in any three subjects at G.C.E (A/L) examination 2024 and qualify physical fitness assessment to be eligible for the university admissions for the academic year 2024/2025.

**Method of Evaluation**

Applications will be evaluated on the basis of practical test and previous sports achievements as below:

| | |
|---|---|
| **Practical Test** | To evaluate candidates' physical fitness and sports ability |
| **Previous Sports Achievements** | Marks will be allocated for previous sports achievements. (Candidates should submit certified copies of certificates of their highest sports achievements along with their applications.) |

Submission of Application

Applicants are hereby requested to apply online through University website **www.jfn.ac.lk** on or before 16.05.2025. Payment receipt of application fee and photocopy of the G.C.E (A/L) 2024 result sheet and certified copies of certificates of their highest sports achievements certified by the principal of the school or a Justice of the Peace must be attached along with the application.

The downloaded application form signed by the candidate, the original payment receipt, G.C.E (A/L) 2024 result sheet and certified copies of sports achievement certificaties should be sent under registered cover or handed over to Senior Assistant Registrar, Admissions Branch, University of Jaffna, Ramanathan Road, Thirunelvely by mentioning **"Application for Physical Education - 2024/2025"** in the left hand corner of the envelope to reach the above address on or before 20.05.2025.

Eligible candidates will receive the Admission Card only via email. All the relevant information will be updated in the **University of Jaffna website; www.jfn.ac.lk**

**Payment Method**

The application fee of Rs.2000/= may be made in any branch of the Peoples' Bank in favour of the University of Jaffna Account No. 440002410001667. Please note that **payments cannot be made via online for this purpose.**

The applications of those who do not possess the minimum admission require ments, those which do not accompany the paying in voucher, the certified photo copy of G.C.E (A/L) 2024 results sheet or applications received after the closing date will be rejected.

For further details, please contact 021 222 6714 or e-mail admissions@ univ.jfn.ac.lk.

Registrar



# மழையால் கைவிடப்பட்டது ஆட்டம்



ஐ.பி.எல். தொடரில் நேற்று இரவு நடைபெற்ற டெல்லி மற்றும் ஹைதராபாத் அணிகளுக்கு இடையிலான ஆட்டம் மழை காரணமாகக் கைவிடப்பட்டது. இதனால் இரண்டு அணிகளுக்கும் தலா ஒரு புள்ளி வழங்கப்பட்டது. (ம)


## மரண அறிவித்தல்

தோற்றம் 05 . 03 . 1945



மறைவு 04 . 05 . 2025

**அமரர் திரு. சின்னத்துரை சண்முகலிங்கம்**

(உரிமையாளர் - சண்யோ கோப்பி & கூல்பார் - சுன்னாகம்.
முன்னாள் உப அதிபர் யா/ சங்குவேலி அ.த.க.பாடசாலை)

அவர்கள் நேற்று முன்தினம் (04.05.2025) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்

வன்னியசிங்கம் வீதி,
இணுவில் தெற்கு, இணுவில்.

தகவல் :
குடும்பத்தினர்

(CS/ 3116) J-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 15 . 04 . 1952



மறைவு 04 . 05 . 2025

**திருமதி. பரிமளகாந்தி தர்மபாலன்**

முதலாம் வட்டாரம் அம்மன் கோவிலடி மண்டைதீவைப் பிறப்பிடமாகவும், மண்கும்பானை வாழ்விடமாகவும், கைலாசப் பிள்ளையார் கோவிலடி நல்லூரை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட திருமதி. பரிமளகாந்தி தர்மபாலன் அவர்கள் 04.05.2025 ஞாயிற்றுக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலம் சென்ற தர்மபாலன் (உத்தா) அவர்களின் அன்பு மனைவியும், காலம் சென்றவர்களான சுந்தரம்பிள்ளை - பவளம்மா தம்பதியரின் மூத்த மகளும், காலம் சென்றவர்களான நல்லையா - இரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகளும், தர்ஜிகா, தர்மினா, தவஸ்திகா ஆகியோரின் பாசமிகு தாயாரும், சசிகரன், பிரதீப்சன், சிறீரங்கன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கௌதீப், பிரத்விக், பிரவியா ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும், சிவசாந்தன், குணசாந்தன், தவசாந்தன், காலம் சென்ற செல்வராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலம் சென்றவர்களான சறோஜினிதேவி, புலேந்திரன், மற்றும் உலகேஸ்வரி, செல்வராணி, ஜெயா, வசந்தி, ஜெயந்தி, காலம் சென்ற சிறீதரன் ஆகியோரின் பாசமிகு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 06.05.2025 செவ்வாக்கிழமை பகல் 10.00 மணியளவில் அன்னாரின் தற்போதைய இல்லத்தில் இடம் பெற்று. தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.


கைலாசப் பிள்ளையார்
கோவிலடி, நல்லூர்.

தகவல் :
குடும்பத்தினர்
0773644125

(CS/3118) D'

## மரண அறிவித்தல்

தோற்றம் 24 . 09 . 1948



மறைவு 05 . 05 . 2025

**வேலாயுதப்பிள்ளை பாலசுப்பிரமணியம்**

யாழ்ப்பாணம் அரியாலையைப் பிறப்பிடமாகவும், 106 ஆனந்தம் வடலி வீதியை வதிவிடமாகவும் கொண்ட வேலாயுதப்பிள்ளை பாலசுப்பிரமணியம் அவர்கள் நேற்று (05.05.2025) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலாயுதப்பிள்ளை - நவமணி தம்பதியரின் பாசமிகு மூத்த புதல்வனும், காலஞ்சென்ற பஞ்சரத்தினம் - பரஞ்சோதி தம்பதியரின் பாசமிகு மருமகனும், சகுந்தலாவின் பாசமிகு கணவரும், இந்திராணி, ஸ்ரீகந்தராசா, ஈஸ்வரி ஆகியோரின் சகோதரனும், சசிகலா (London), மோகனகலா, பாலதாஸ் (London), ஜெயசீலன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெயபாலன், சுகிர்தா, சுதர்சினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், திருநாதன், காலஞ்சென்ற சண்முகதாசன் மற்றும் திலகநாதன், லோகநாதன், விஜயபாலா, தவமணி, வரதராஜா காலஞ்சென்ற பரமலிங்கம் மற்றும் சோதிமலர், செம்பற்சோதி, சுகந்தி, உருத்துரகுமாரி, றஜிதா ஆகியோரின் மைத்துனரும், மேஷிகா, மேஷன், சதுர்த்திகா, சிந்துஜா, லரீனா, லரிஷா, பவிசியா, டிசானா, கவிநயா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.05.2025) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல் :
குடும்பத்தினர்
077 833 3977

(CS/3119) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிரசித்திபெற்ற நீர்வேலி ஸ்ரீ கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருந் திருவிழாவின் திருமஞ்சத்திருவிழா கடந்த சனிக்கிழமை வெகுசிறப்பாகவும், பக்திபூர்வ மாகவும் நடைபெற்றது. (எ-17-66)

## இன்று...

8 ஆயிரத்து 287 உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களே தெரிவுசெய்யப்பட வுள்ள நிலையில் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களில் இருந்து 75 ஆயிரத்து 589 பேர் போட்டியிடுகின் றனர். 13 ஆயிரத்து 759 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.
தேர்தலை முன்னிட்டு, ஒரு கோடியே 71 லட்சத்து 56 ஆயிரத்து 338 பேர் வாக் களிப்பதற்கு தகுதிபெற்றுள்ளனர். 2 லட்சத்து 25 ஆயிரம் அரச ஊழியர்கள் தேர்தல் கடமையில் ஈடுபடுத்தப்பட் டுள்ளனர்.
அத்துடன், தேர்தல் பாதுகாப்புக் கட மைக்கென 65 ஆயிரம் பொலிஸார் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். 3 ஆயிரம் வரையிலான விசேட அதிரடிப் படையினரும் களமிறக்கப்பட்டுள்ளனர். தேவையேற்படும் பட்சத்தில் இராணுவ ஒத்துழைப்பை கோருவதற்கும் நடவடிக் கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.
காலை 7 மணிக்கு வாக்களிப்பு ஆரம்ப மாகி, மாலை 4 மணியுடன் நடைபெற வுள்ளது. அதன் பின்னர் வாக்களிப்பு நிலையங்களிலேயே வாக்குகள் எண ணப்பட்டு, இன்று இரவு 11 மணிக்கு முன் னர் தேர்தல் முடிவுகள் வெளிவரும் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-44)

## சுதந்திரமான...

மேலும் தெரிவித்ததாவது:-
339 உள்ளூராட்சி மன்ற அதிகாரசபை களுக்கான வாக்கெடுப்பு இன்று காலை 7 மணி முதல் மாலை 4 மணிவரை நடைபெறவுள்ளது. வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளவர்கள் அனைவரும் தவறா மல் வாக்களிக்கவேண்டும். ஆணைக் குழு தனக்கான பொறுப்பை நிறைவேற் றியுள்ளது. இனி உங்களின் (மக்கள்) பொறுப்பை நிறைவேற்றுங்கள்.
சுதந்திரமானதும் நீதியானதுமான வகை யில் தேர்தலை நடத்த சட்டத்தின் பிரகா ரம் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. அமை தியான முறையில் தேர்தலை நடத்துவ தற்காக எந்தவொரு நடவடிக்கையையும் எடுப்பதற்குத் தயங்கப்போவதில்லை. சட்டத்தின் மூலம் உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் முழுமையாகப் பயன்ப டுத்தப்படும்.
நாட்டின் சட்டம் மற்றும் பொது ஒழுங்கை நாட்டுமக்கள் அனைவரும் முறையாகக் கடைப்பிடிக்கவேண்டும். வாக்கெடுப்பு நிலையத்தில் ஏதேனும் அசம்பாவிதம் நேர்ந்தால் முழு வாக்கெடுப்பு நடவடிக் கைகளுக்கும் பாதிப்பு ஏற்படும். ஆகவே, அவதானத்துடன் செயற்படவேண்டும்.
அரச மற்றும் தனியார் துறை சேவையா ளர்கள் வாக்களிக்கச் செல்வதற்கு இய லுமான வகையில் விடுமுறை வழங்க வேண்டும் என்பதைக் குறிப்பிட்டு விசேட சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டிருந் தோம். ஒருசில தனியார் துறையினர் தமது சேவையாளர்கள் வாக்களிக்கச் செல்வதற்கு விடுமுறை வழங்கவில்லை என்று ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு கள் கிடைத்துள்ளன. ஆணைக்குழு வின் அறிவுறுத்தலுக்கு அமைய செயற் படவேண்டும் என்று தனியார்துறை சேவை வழங்குநர்களிடம் கேட்டுக் கொள்கிறோம் - என்றார். (அ-எ-இ)

## அசாதாரண...

காலநிலை காரணமாக, 8 குடும்பங் களைச் சேர்ந்த 26 பேர் பாதிக்கப்பட்டுள் ளனர் என்று யாழ்ப்பாணம் மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவின் பிரதிப் பணிப் பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித் துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
உடுவில் பிரதேச செயலர் பகுதிக்கு உட் பட்ட ஜே/203 கிராம சேவகர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 5 பேர் மின் னல் தாக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ளது டன், அவர்களின் வீடு பகுதியளவில் சேதமடைந்துள்ளது.
ஜே/191 கிராம சேவகர் பிரிவில் 3 குடும் பங்களைச் சேர்ந்த 7 பேர் பலத்த காற் றால் பாதிக்கப்பட்டுள்ளதுடன், அவர்க ளின் வீடு பகுதியளவில் சேதமடைந் துள்ளது.
சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக் குட்பட்ட ஜே/141 கிராம சேவகர் பிரிவில் 2 குடும்பங்களைச் சேர்ந்த ஏழுபேர் பலத்த காற்றால் பாதிக்கப்பட்டுள்ளது டன், இரண்டு வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.
அத்துடன் ஜே/150 கிராம சேவகர் பிரி வில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த இருவர் பலத்த காற்றால் பாதிக்கப்பட்டுள்ளது டன் ஒரு வீடு பகுதியளவில் சேதமடைந் துள்ளது.
மேலும், சங்கானைப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஜே/180 கிராம சேவகர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் பலத்த காற்றால் பாதிக்கப்பட்டுள்ளது டன் வீடும் பகுதியளவில் சேதமடைந்துள் ளது - என்றார். (அ-ம-27)

## நகுலேஸ்வரர்...

மறைந்த நகுலேஸ்வரக் குருக்களின் தீவிர முயற்சியின் பயனாகப் பல சிவ அடியவர்களின் பங்களிப்புடன் இந்தக் காண்டாமணி உருவாக்கப்பட்டுள்ளது. இந்த மணியிலிருந்து எழுப்பப்படும் ஓசை சுமார் ஐந்து கிலோ மீற்றர் தூரம் வரை கேட்கும் திறன் வாய்ந்ததெனத் தெரிவிக்கப்படுகிறது. (அ-ம-66)

## கணேசபுரத்தில்...

துள்ளனர்.
இரு தினங்களுக்கு முன்பாக வவுனியா கணேசபுரம் பகுதியில் உள்ள வீட்டில் இருந்து 35 பவுண் நகைகள் கொள்ளை யிடப்பட்டிருந்தன. இந்த விடயம் தொடர் பில் வவுனியா நெளுக்குளம் பொலிஸ் பொறுப்பதிகாரி டி.எம்.ஏ.சமரக்கோன் தலைமையில் உப பொலிஸ் அதிகாரி எல்.எஸ்.வீரசிங்க, பொலிஸ் கான்ஸ்ட பிள்களான நிரோஜன், தீபன் அடங்கிய குழுவினரால் விசேட விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.
இந்த நிலையில், நேற்றுமாலை கொக் குவெளிப் பகுதியில் வைத்து சந்தேகத் தின் அடிப்படையில் 29 வயதுடைய இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டார். மேலதிக விசாரணைகளின் அடிப்படை யில் அவரிடம் இருந்து 35 பவுண் நகை கள் மீட்கப்பட்டதுடன், சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கைக ளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (அ-ம-110)

## மேர்வின்...

சில்வாவுக்கு விளக்கமறியல் நீடிக்கப்பட் டுள்ளது.
இந்த வழக்கு நேற்று விசாரணைக்காக எடுக்கப்பட்டபோதே, மேர்வின் சில்வா உட்பட மூவரையும் மே மாதம் 19ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கு மாறு மஹர நீதவான் நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது.
இதேவேளை, இந்த வழக்குடன் தொடர் புடைய முன்னாள் இராஜாங்க அமைச் சர் பிரசன்ன ரணவீர மற்றும் மில்ராய் பெரேரா ஆகியோருக்கும் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது. அவர்கள் இருவரையும் எதிர்வரும் வழக்குத் தவ ணையின்போது கைதுசெய்து நீதிமன் றத்தில் முற்படுத்தவும் உத்தரவு பிறப்பிக் கப்பட்டுள்ளது. (அ-ம-இ)

## வாக்களிப்பு...

அறிவித்தலை விடுத்துள்ளது.
இதன்படி, கைபேசிகளைப் பயன்படுத்து தல், ஒளிப்படம் எடுத்தல், காணொலி எடுத்தல், ஆயுதங்களை வைத்திருந் தல், புகைபிடித்தல் அல்லது போதைப் பொருள் பாவனை, மதுபானம் அருந்து தல், மதுபானம் அல்லது போதைப்பொ ருள் பாவனையில் ஈடுபட்ட பின்னர் வாக்கெடுப்பு நிலையங்கள் மற்றும் வாக்கெண்ணும் நிலையங்களுக்கு வரு தல் போன்றவை சட்டரீதியாகத் தடை செய்யப்பட்டுள்ளன என்று அந்த அறிக் கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-எ-இ)

## வடமாகாண...

வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட் டங்களில்) மாலை அல்லது இரவு வேளைகளில் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.
இடியுடன் கூடிய மழை பெய்யும்போது அந்தப் பகுதிகளில் தற்காலிகமாக பலத்த காற்று வீசக்கூடும். அத்துடன் மின்னல் தாக்கங்களும் கணிசமாக இருக்கும். எனவே, மின்னலால் ஏற்ப டும் ஆபத்துகளைக் குறைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பது அவசியம் - என்றுள்ளது. (அ-ம)

## யாழ்...

ராவார்.
அரசடி வீதி, வட்டுக்கோட்டை பகுதியைச் சேர்ந்த அந்தச் சிறுவனின் உடற்பாகங் கள் திடீரென வீங்கியதைத் தொடர்ந்து அவர் கடந்த மாதம் 20ஆம் திகதி யாழ்ப் பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருந்தார். அந்தச் சிறுவனுக்கு சலத்துடன் புரோட் டின் வெளியேறும் நோய் இருந்ததாகக் கூறப்படுகின்றது. இந்த நிலையில் நேற்று முன்தினம் நள்ளிரவு 12 மணியளவில் அவர் உயிரிழந்துள்ளார்.
இறப்புக்கான காரணங்கள் உறுதிப்படுத் தப்படாத நிலையில், சடலத்தில் இருந்து மாதிரிகள் பெறப்பட்டு அவை கொழும் புக்கு அனுப்பப்பட்டுள்ளன.
இறப்பு விசாரணைகளை வலிகாமம் கிழக்கு திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (அ-ம-26-27)

## அடி...

மீட்கப்பட்டுள்ளார்.
கிராம மக்கள் வழங்கிய தகவலுக்கு அமையவே சடலம் மீட்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை முல்லைத்தீவு பொலிஸார் மேற்கொண்டுவருகின்ற னர். (அ-ம-19)

## ஐந்து...

இந்தப் பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்தே மேற்படி ஐந்து ஒப்பந்தங்க ளும் கைச்சாத்திடப்பட்டுள்ளன.
நான்கு புரிந்துணர்வு ஒப்பந்தங்களும், ஓர் இணக்கப்பாட்டு ஒப்பந்தமுமே இவ் வாறு கைச்சாத்தாகியுள்ளன என்று தெரியவருகின்றது. இயந்திர உற்பத்தி, விவசாய ஒத்துழைப்பு, கடற்றொழில் நடவடிக்கைகள் மற்றும் ஆடைக்கைத் தொழில் ஆகிய துறைகளை மையப்ப டுத்தியனவாக பிரதானமான ஒப்பந்தங் கள் அமைந்துள்ளன. இரு நாடுகளும் பரஸ்பரம் தமது சந்தைவாய்ப்பை அதிக ரிக்கவும் தீர்மானித்துள்ளன.
ஜனாதிபதி அநுர தனது வியட்நாம் பய ணத்தை முடித்துக்கொண்டு இன்று மீண்டும் இலங்கைக்குத் திரும்புகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## இலங்கைக்குள்...

இராமேஸ்வரத்தில் இருந்து சட்டவிரோத மான முறையில் இலங்கைக்குள் ஊடு ருவிய நபர், நெடுந்தீவுக் கடற்பரப்பில் வைத்துக் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
2023ஆம் ஆண்டு மன்னாரில் இருந்து இந்தியாவின் இராமேஸ்வரம் பகுதிக்குச் சென்று தஞ்சமடைந்த நபரே அங்கி ருந்து மீண்டும் இலங்கைக்கு வருகை தந்த வேளையில் கைதுசெய்யப்பட்டுள் ளார். அவருடன் ஐந்து பேர் வருகைதர விருந்தனர். எனினும், படகுகளில் ஏற் பட்ட பழுது காரணமாக, அவர்கள் வராத நிலையில் குறித்தநபர் மட்டுமே இலங் கைக்குத் திரும்பியுள்ளார் என்று முதற் கட்ட விசாரணைகளின் அடிப்படையில் தெரியவந்துள்ளது. சந்தேகநபர் இன் றையதினம் ஊர்காவற்றுறை நீதிமன்றத் தில் முற்படுத்தப்படவுள்ளார். அதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள் ளன. (அ-ம-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கடை வாடகைக்கு தேவை**

யாழ்ப்பாணம், நல்லூர், திருநெல்வேலி, கே.கே.எஸ் வீதி ஆகிய பகுதிகளில் மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு கடை ஒன்று வாடகைக்கு தேவை.

தொடர்பு:- 077 919 1529

**K.M Health Care**
Kopay Centre, Kopay.

வயோதிபர்கள், நோயாளர்கள், குழந்தைகள் போன்றோரை தங்கி நின்று பராமரிப்பதற்கு பராமரிப்பாளர்கள் உடன் தேவை.
ஆண் / பெண் இருபாலாரும் தொடர்பு கொள்ளலாம்.

TP: 0761364990, 0761364991, 0761364992

**வேலையாள் தேவை**

கொக்குவிலில் உள்ள வீடொன்றில் தங்கி நின்று வேலை செய்வதற்கு (பாதுகாப்பு தொழிலாளி) ஒருவர் தேவை.(40வயதிற்கு மேல்)

0774773488

**திருமுருகன் பொதிகள் சேவை**

விசேட சலுகைகள் வெளிநாடுகளுக்கான 11 kg மேற்பட்ட பொதிகளுக்கு 1 kg க்கான கட்டணம் UK-1380/=, France-1930/=, Germany-1880/=, Australia-2130/=
மற்றைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள் திருமுருகன் பொதிகள் சேவை
321, K.K.S Road Jaffna (கிளைகள்-கொழும்பு, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, புதுகுடியிருப்பு, மல்லாவி)

தொடர்புகளுக்கு: 077 755 4528



நாவற்குழி சித்தி விநாயகர் முன்பள்ளியின் வருடாந்த செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு முன்பள்ளியின் முகாமைக்குழுத் தலைவி திருமதி விஜயருபன் தபோதினி தலைமையில் அண்மையில் பிற்பகல் 3 மணிக்கு இடம்பெற்றது. (ச-22,159)

# அறநெறிப்பாடசாலை கட்டடம் திறந்துவைப்பு



வவுனியா பிரமணாலங்குளம் வடகாடு ஸ்ரீமுத்து மாரியம்மன் அறநெறிப்பாடசாலையில் சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தின் 19 இலட்சத்து 38 ஆயிரம் ரூபா பெறுமதியான புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டடத் திறப்பு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.45 மணியளவில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்ட சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் புதிய கட்டடத்தைச் சம்பிரதாயபூர்வமாக நாடாவெட்டித் திறந்து வைத்தார். (ச-22,66)


# அச்சுவேலி மத்திய கல்லூரி மாணவர்கள் கௌரவிப்பு



யாழ்ப்பாணம், மே 6

அச்சுவேலி மத்திய கல்லூரியில் 2024 ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு, கல்லூரியின் பிரதான மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. கல்லூரி முதல்வர் நா.மகேந்திரராஜா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக கல்லூரியின் பழையமாணவன் லண்டன் மாநகரில் இருந்து வருகைதந்திருந்த து.நிர்மலரோஜன் மற்றும் ஓய்வுநிலை அதிபர் கு.ரவிச்சந்திரன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (ச-25)

**31ஆம் நாள் நினைவஞ்சலி**



தோற்றம்
30 . 09 . 1942

மறைவு
06 . 04 . 2025

அமரர் கார்த்திகேசு கனகசந்திரன்
(ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர்)

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து
நீங்கள் விண் நோக்கிச் சென்றாலும்
கண் விட்டு மறையாது
உங்கள் நினைவுகள்

சரசாலை வடக்கு,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்

(CS/58176) J-1

# சிறிய குறுக்கு வீதியை செப்பனிடக் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 6

உரும்பிராய் சந்தியிலிருந்து யாழ். நகர் நோக்கி வரும் வீதியையும், மருதனார்மடம் செல்லும் வீதியையும் இணைக்கும் சுமார் 15 மீற்றர் நீளமான குறுக்கு வீதியை சீரமைக்கவேண்டும் என்று ஞான வைரவர் கோவிலடி சனசமூக நிலையம் வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடம் கடிதம் மூலம் கோரியுள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

இந்தக் குறுக்குவீதி நீண்டகாலமாகப் பாவனையில் இருந்தது. இந்த வீதியால் உரும்பிராய் சந்தியில் ஏற்படும் வாகன நெருக்கடி ஓரளவுக்குக் குறைக்கப்பட்டது. ஆனால் கடந்த சில வருடங்களாக இந்த வீதி தனிப்பட்டவர்கள் சிலரால் தமது வாகனங்களை நிறுத்தும் இடமாக ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. இந்த வீதியைப் பயன்படுத்தமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதால் வீதியைச் செப்பனிட்டு போக்குவரத்து வசதியை ஏற்படுத்துவதன்மூலம் உரும்பிராய் சந்தியில் ஏற்படும் வாகன நெருக்கடியைக் குறைக்க முடியும் என்றுள்ளது. (எ-33)

**வீடு வாடகைக்குத் தேவை**

யாழ். நல்லூரை அண்மித்த பகுதியில் அரச சார்பற்ற நிறுவனத்திற்கு அலுவலக தேவைகளுக்கு வீடு வாடகைக்குத் தேவை.

077 919 1529

(CS/57220 B) J-1

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.05.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.